

இணுவில்

அமரர்

# திரு.முத்துக்குமாரு விஜயரகுநாதன்

(கணக்காளர்)

அவர்களின் சிவபதப் பேறு குறித்த

# "நினைவு மலர்"

04.02.2020

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும்
உறுதுணையாக இருந்து அன்புக்கு ஊற்றாகி
பாசத்துக்கு எடுத்துக்காட்டாகி
பொறுமையின் இலக்கணமாய்...
எமைப் பேணி பாதுகாத்து
நல்லறிவூட்டி நல்வழிப்படுத்தி
நாங்கள் சோர்ந்து விழுந்த போதெல்லாம்
எமக்கு உற்சாகம் தந்து
வாழ்க்கைப் பாதையில் கவனமாய்
பயணிக்கச் செய்து இன்று
எமையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வத்திற்கு
இம் மலரினை சமர்ப்பணம் செய்கின்றோம்.

—குடும்பத்தினர்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

தவப்பேறு
30 . 05 . 1951



சிவப்பேறு
03 . 01 . 2020

## அமரர்
## இணுவில் திரு.முத்துக்குமாரு விஜயரகுநாதன்
(கணக்காளர்)

"இமைப்பொழுதும் எம் நெஞ்சில் இறவா அன்பே"

## அவர்களின் திதி வெண்பா

ஆண்டு விகாரி அதிலுதித்த மார்கழியில்
பூண்ட பூர்வபக்கத்திதி அட்டமி – மாண்புடைய
நல்லார் விஜய ரகுநாதன் சிவனடியைச்
சொல்லாமற் சென்றடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறி யோர் தூவெண்மதிசூடி(க்)
காடுடைய சுடலைப் பொடிபூசியென்னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் உனைநாட் பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மான் இவனன்றே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாயப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன்ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்று அருள்புரியாயே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றது ஆர் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமை
மணவாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

கற்பனை கடந்தசோதி கருணையே யுருவமாகி
அற்புதக் கோலநீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோகமாகுந் திருச்சிற்றம் பலத்துள்நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரியசித்திமாலை

பந்தம் அகற்றும் அநந்தகுணப் பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில் ஈண்டி இருந்து கரக்குமோ
சந்தமறை ஆகமங் கலைகள் அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை அன்பு கூரத் தொழுகின்றோம்.

உலகமுழுவதும் நீக்கமற ஒன்றாய் நிற்கும்பொருள் எவன்அவ்
உலகிற்பிறக்கும் விகாரங்கள் உறாதமேலாம் ஒளியாவன்?
உலகம்புரியும் வினைப் பயனை ஊட்டும் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை உவந்து சரணம் அடைகின்றோம்.

இடர்கள் முழுதும் எவனருளால் எரிவீழும் பஞ்சென மாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால் சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க்கு ஊறின்றி கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதி பொன் சரணம் அடைகின்றோம்.

மூர்த்தியாகித் தலமாகி முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத் திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்திநாளும் அறியாமை அகற்றி அறிவிப்பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் வினையின் முதல்யாவன் செய்யப்படும் அப்பொருள் யாவன்
ஐயமின்றி உளதாகும் அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில் ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப் புரிந்து சரணம் அடைகின்றோம்.

வேதம் அளந்தும் அறிவரிய விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும் விமலன் யாவன் விளங்கு பர
நாதமுடிவில் வீற்றிருக்கும் நாதன்எவன் எண்குணன் எவன் அப்
போதமுதலைக் கணபதியைப் புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

மண்ணின் ஓர் ஐங்குணமாகி வதிவான் எவன் நீரிடை நான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின் மூன்றாய் நவில்வான் எவன் வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி இயைவான் எவன் வானிடை ஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை அன்பிற் சரணம் அடைகின்றோம்.

பாச அறிவில் பசு அறிவில் பற்றற்கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும் பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும் பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத் திகழச் சரணம் அடைகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை யாவன் மூன்று தினமும் உம்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும் சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும்எண் தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால் படிக்கில் அட்ட சித்தியுறும்.

திங்கள் இரண்டு தினந்தோறும் திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம் தயங்க இருபத்தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின் பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும் தோன்றும் எனச்செப் பினர் மறைந்தார்.

-காசிப முனிவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலையில்

### அருளிய

# திருவெம்பாவை

### திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள்கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூ றித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானெவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையும் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர் போல் வாளாகிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார்தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கைப் புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய்எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்ப
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரைக் கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதா(க)
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடிநலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்பரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

**திருச்சிற்றம்பலம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணப்பந்தத்தில் இணைந்த போது (1978)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினருடன்

(1992 களில்)



(1989 களில்)



விக்டோரியா பார்க் (1978)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகளின் பட்டமளிப்பின் போது









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளின் திருமண நிகழ்வின் போது (28.01.2008)




மகனின் திருமண நிகழ்வின் போது (13.06.2019)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டமளிப்பின் போது





## இல்லாளின் பட்டமளிப்பின் போது






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டமளிப்பின் போது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. முத்துக்குமாரு விஜயரகுநாதன்

## வாழ்க்கைக் குறிப்புகள்

- ★ பிறப்பிடம் - இணுவில்
- ★ தந்தை – பெரியதம்பி முத்துக்குமாரு
- ★ தாய் - செல்லம்மா முத்துக்குமாரு
- ★ பிறந்த திகதி – 30.05.1951

### ★ குல தெய்வங்கள்

இணுவில் வட்டுவினி வரசித்தி விநாயகர்

இணுவில் கந்தசுவாமியார்

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார்

### ★ கல்வி கற்ற பாடசாலைகள்

இணுவில் இந்துக்கல்லூரி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி

### ★ உயர்கல்வி பெற்ற நிறுவனங்கள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி<br>மருதானை தொழில்நுட்பக் கல்லூரி | - HNDA (உயர்கணக்கியல் டிப்ளோமா) |
| கொழும்பு பல்கலைக்கழகம் | - B.DS இளமாணி அபிவிருத்திக் கல்வி |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | - M.A. (Population Studies) முதுமாணி (சனத்தொகைக் கல்வி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **பணி செய்த இடங்கள்**

- சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு எழுதுவினைஞர்-1975-1979

- பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எழுதுவினைஞர் -1980-1983

- கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு எழுதுவினைஞர் - 1983-1985

கல்வித் திணைக்களம், முல்லைத்தீவு - கணக்காளர் -1985-1991

கல்வித் திணைக்களம், கிளிநொச்சி -

மாகாணக் கல்வி அமைச்சு, திருகோணமலை -கணக்காளர் -1991-1991

பிராந்தியக் கல்வித் திணைக்களம், திருகோணமலை - கணக்காளர் -1991-1993

பிரதேச செயலகம், கோப்பாய் - கணக்காளர் -1993-1996

போதனா வைத்தியசாலை, யாழ்பாணம் - கணக்காளர் -1996-2005

மாவட்டச் செயலகம், யாழ்பாணம் - கணக்காளர் -2005-2010

போதனா வைத்தியசாலை, யாழ்பாணம் - கணக்காளர் -2010-2011

ஓய்வு பெற்ற நாள் - 30.05.2011

★ மனைவி – திருமதி. குககுமாரி விஜயரகுநாதன் (அம்பாள்) (ஓய்வுநிலை அதிபர்)

★ திருமண நாள் 04.09.1978

★ மாமன் - அமரர் கந்தையா ஆறுமுகம் (ஓய்வுநிலை ஆசிரியர்)

★ மாமி - அமரர் சரஸ்வதி ஆறுமுகம் (ஓய்வுநிலை ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **பிள்ளைகள் -**

திருமதி. லாவண்யா மயூரேசன் (ஆசிரியை, கொ. றோயல் கல்லூரி)

திரு. விஜயரகுநாதன் ஸ்ரீவிசாகன் (விரிவுரையாளர், பல்கலைக்கழகக் கல்லூரி, மாத்தறை)

திரு. விஜயரகுநாதன் ஸ்ரீவித்தகன் (உயிரியல் மருத்துவப் பொறியியலாளர், போதனாவைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

★ **மருமக்கள் -**

Dr. பரமகுருநாதன் மயூரேசன் (பொது வைத்திய நிபுணர், தள வைத்தியசாலை, புத்தளம்)

திருமதி. சுபரம்யா ஸ்ரீவிசாகன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வவுனியாவளாகம்)

★ மனைவி வழி மைத்துனர்கள்:

திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (முன்னாள் அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை, ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி கல்விவலயம்)

திரு. ஆறுமுகம் குகமூர்த்தி (ஓய்வுநிலை விரிவுரையாளர், தொழில்நுட்பக்கல்லூரி, மருதானை)

திருமதி. கோணேஸ்வரி இராமச்சந்திரன் (ஆசிரியை, யா/இராமநாதன் கல்லூரி)

கலாநிதி. ஆறு திருமுருகன் (ஓய்வுநிலை அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி, தலைவர் துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பளை, தலைவர் சிவபூமி அறக்கட்டளை, இலங்கை).

திருமதி. விக்கினேஸ்வரி நரேந்திரா (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

திருமதி. கேதீஸ்வரி ஆனந்தரட்ணம் (ஆசிரியை, யா/ இந்து மகளிர் கல்லூரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **மனைவி வழிச் சகோதரர்கள்:**

அமரர். ஞானலஷ்மி ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (ஆசிரியை, யா/ நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

பேராசிரியர். சசிகலா குகமூர்த்தி (தலைவர், விசேட கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)

அமரர் ஆறுமுகம் இராமச்சந்திரன் (ஓய்வுநிலை சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம்)

திரு. இராஜசிங்கம் நரேந்திரா (ஓய்வுநிலை ஆசிரியர், யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி)

திரு. சிவஞானரட்ணம் ஆனந்தரட்ணம் (முகாமையாளர், இலங்கைவங்கி)

★ **பெறாமக்கள்:**

திருமதி. கேதுஷா கமலகுமார் (ஆசிரியை, யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

திரு. நற்குணம் கோகுலன் (ஆய்வாளர், கிறீனிச் பல்கலைக்கழகம், பிரித்தானியா)

செல்வி. உஷேனி நரேந்திரா (மாணவி, கலாலயா அழகுக்கலைப் பயிற்சி நிலையம்)

திருமதி. வினோஜி விசாரதன் (Lead Business Analyst, Colombo)

செல்வன். ஆனந்தரட்ணம் விதுஷன் (மாணவன், யாழ். இந்துக்கல்லூரி)

செல்வி. தர்மிதா ஆனந்தரட்ணம் (மாணவி, யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ **மனைவி வழி மருமக்கள்:**

Dr. சொக்கலிங்கம் கமலகுமார் (யாழ். போதனா வைத்தியசாலை)

திருமதி. தாயினி கோகுலன் (Software Engineer, UK)

திரு. குகமூர்த்தி விசாரதன் (Director of Business Development, Colombo)

திரு. குகமூர்த்தி வேதப்பிரியன் (Associate Technical Lead, Colombo)

★ **பேரப்பிள்ளைகள்:**

கோகுலன் லிவிராம்

கமலகுமார் கல்கி

விசாரதன் தனிஷ் சவீன்

**திருமணவாழ்வில் 41 ஆண்டுகள் நிறைவு விழா**

**04.09.2019 அன்று நடைபெற்றது.**

**வாழ்வின் நிறைவு 03.01.2020**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரினில் விஜயமாகி:

## ஞாலத்தை ஜெயம் கொண்டவர்

அமரர் விஜயரகுநாதன் அவர்கள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என வாழ்ந்த பெருந்தகையாளர். சிறுபராயம் முதற்கொண்டு அவர் தம் குலதெய்வமான இணுவில் வட்டுவினி வரசித்தி விநாயகர் மீது ஆழ்ந்த பக்தி கொண்டவர். அதனால் நல்லொழுக்கத்தோடும் புலமையோடும் திகழ்ந்து பட்டம் பெற்று பல பதவிகளை அலங்கரித்தவர். இணுவில் இராமநாதக் குருக்களோடும் அவர் மருகர் கோப்பாய் பாஸ்கரக் குருக்களோடும் அவர் மருகரான என்னோடும் இணைந்து ஆலய வளர்ச்சியில் அரும் பணிகள் ஆற்றியவர்.

எதையும் நன்கு திட்டமிட்டு ஒழுங்காகச் செய்யும் பழக்கமும், தொழில்சார் பணிகளில் நியமம் பேணும் முறைமையும் அவரின் தனிச்சிறப்பு. பூசை வழிபாடுகளில் அவர் காட்டும் ஈடுபாடு, புனிதம், பக்தி, பாராயணம் என்பன எல்லோருக்குமே ஒரு முன்மாதிரியான செயற்பாடாகவே அமையும்.

சதாசர்வ காலமும் பக்திப் பாசுரங்களைப் பாடியபடியே இருப்பார். பிள்ளையாரின் விசேட திருவிழாக்களை முன்கூட்டியே எமக்கு அறியத் தந்து எம் கடமைகளையும் உணர்த்தக்கூடிய ஓர் உத்தமர்.

குடும்பத்தைப் பல்கலைக்கழகமாக்கி உரிய தருணமதில் உத்தியோகத்தையும், விவாகத்தையும் அமைத்துக் கொடுத்த குடும்பத் தலைவர். பணிவும், பண்பும், இனிமையும் இரக்கமும் பேணி இல்லறம் காத்த ஆத்மார்த்த அன்பர்.

"அஹிம்ஸா ஸத்யம்மக்ரோதஸ்த்யாக: சாந்திரபைசுனம்
தயாபூதேஷ்வ லோலுப்த்வம் மார்தவம் ஹ்ரீரசாபலம்" - கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லாமை, வாய்மை, கோபமின்மை, தியாகம், அமைதி, புறங்கூறாமை, உயிர்களிடம் இரக்கம், பிறர்பொருளை விரும்பாமை, மென்மை, நாணம், மனம் சலியாமை என கீதை காட்டிய வழி வாழ்ந்தவர்.

பிள்ளையாரின் நினைப்போடும், பிரியமானவளின் அணைப்போடும், இப்புவியில் தன் இணைப்பை விட்டு புகழுடம்பு தாங்கி சாயுஸ்ய முக்தி பெற்றார்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்

எச்சத்தால் காணப்படும்"

என்பதற்கமைய அவர்தம் எச்சங்கள் அவரின்

தகமையை என்றென்றும் எமக்கு உணர்த்தி நிற்கும்.

அன்பே சிவம்

"மந்திரகிரியா சுரபி" சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள் (J.P)

பிரதமகுரு ஸ்ரீ இணுவில் வட்டுவினி வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனும் தெய்வம் ஆகலாம்

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் எனது ஆரம்பகாலத்தில் நான் விரிவுரையாளராகப் பணிபுரிந்தபோது அமரர் விஜயரகுநாதன் கணக்கியல் டிப்ளோமா பகுதி நேர வகுப்பில் பயின்று கொண்டிருந்தார். நான் அவரின் வகுப்பிற்குக் கணக்கியல், கணக்காய்வு ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் பணியில் செயற்பட்டேன் அமரர் மிகவும் பணிவுடையவராகவும் பாடங்களில் ஆர்வமுள்ளவராகவும் திறமை உள்ளவராகவும் பயின்று வந்தார்.

நான் விரிவுரையாளராகச் செயற்பட்ட போது நூற்றுக்கணக்கான மாணவர்கட்கு கற்பித்தும் பின்னர் அதிபராகப் பணிபுரிந்தபோது நூற்றுக்கணக்கான மாணவர்களுடன் பழகியும் உள்ளேன் ஆனால் அமரர் விஜயரகுநாதனுடனான தொடர்பு அவர் அரச சேவையில் பணிபுரிந்த காலத்தில், அவர் அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் அவர் அமரத்துவம் அடையுமட்டும் அவருடன் தொடர்பு கொண்டிருந்தேன். அவர் கச்சேரியில் கணக்காளராகப் பணிபுரிந்தபோது தொழினுட்பக்கல்லூரியின் தேவைக்காக அவர் மூலமாக உதவிகளைப் பெற்றுள்ளேன். அவர் யாழ் மருத்துவமனையில் கணக்காளராகப் பணிபுரிந்த போது எனது குடும்ப அங்கத்தவர்களின் மருத்துவ தேவைக்குச் செல்லும் போதெல்லாம் மருத்துவ நிபுணர்களை அறிமுகப்படுத்தி உதவிகளைச் செய்துள்ளார்.

அவர் படிக்கும் காலத்திலும் பல பெரிய பதவிகளில் இருக்கும் போதும் சரி சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் சரி எப்போதுமே எவரிடமும் கனிவாகவும், அன்பாகவும் சிரித்த முகத்துடனுமே பேசி வந்தார். அவர் எவரைப்பற்றியும் குறைவாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்க மாட்டார். தேவையற்ற கதைகள் அவரிடம் இல்லை. ஆன்மீகத்தைப் பற்றியும் இறை அருள் பற்றியுமே என்னிடம் அதிகமாகக் கதைப்பார். அவர் ஓய்வுபெற்ற பின்னரும் அவரை நல்லூர் கோவிலில் சந்தித்துக் கதைப்பேன். அவர் சுகவீனமுற்று வீட்டில் இருந்தபோதும் நான் அவர் வீட்டிற்குச் சென்று சந்திப்பேன். அவ்வாறு சந்திக்கும் சமயத்தில் பல ஆன்மீக நூல்களின் சிறப்புப் பற்றி எனக்குக் கூறுவார்.

அவரால் வெளியிடப்பட்ட "அருணகிரியின் அமுதவாக்கு" என்னும் நூலினை எனக்கு அன்பளிப்பாகத் தந்துள்ளார். அப்போது அருணகிரிநாதரின் திருப்புகழ் பற்றியும் கூறினார். ஆகவே எந்நேரமும் அவர் கந்தனின் கழல்களை நினைந்து உருகுவார்.

அவர் தனது கடமையில் எவ்வாறு பொறுப்பாகவும் திறமையாகவும் செயற்பட்டாரோ அதேபோன்று தனது குடும்ப அங்கத்தவர்களின் முன்னேற்றத்திலும் வாழ்விலும் பொறுப்பாகவும் அன்பாகவும் செயற்பட்டார். எனவேதான் அவரது மனைவி சிறந்த ஆசிரியையாகவும், புகழ்பெற்ற கல்லூரி அதிபராகவும் புகழ் பெற்று இருக்கின்றார். அதே போன்று அவரது பிள்ளைகளும் இன்று நல்ல நிலையிலும் நல்லவர்களாகவும் வாழ்கின்றனர்.

அமரர் விஜயரகுநாதன் தனது உடைமைகளாகக் கொண்டிருந்த நற்குணங்களும் கொள்கைகளும் எண்ணங்களும் என்றும் மறவாத இறைபக்தியும் அனைவராலும் போற்றிப் புகழ்ந்து பாராட்டப்படுகின்றவைகளாகும்.

அறிவு, ஆற்றல், செயற்றிறன், கடமை, கட்டுப்பாடு, கண்ணோட்டம், பொறுமை, நல்ல உள்ளம் ஆகியவற்றைத் தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமைகளாகக் கொண்டிருந்தார். அவரின் தொழில் திறனுக்கும், நல்வாழ்விற்கும் நல்மனதிற்கும் முக்கிய காரணம் அவர் கொண்டிருந்த அன்புடைமையும் இறைவனின் அருள் பெற்ற உள்ளமுமாகும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்".

க. ஜெயரெத்தினம்

ஓய்வுநிலை அதிபர் (தொழில்நுட்பக்கல்லூரி யாழ்ப்பாணம்)

பணிப்பாளர் (தொழில்நுட்பக்கல்லூரி அமைச்சு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை கணக்காளர் சேவை நண்பர்களுடன்




பிரியாவிடை வைபவம் - பளை மத்திய மகாவித்தியாலயம்
(1991 இல்)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் போதனா வைத்தியசாலையின் நிகழ்வுகளின் போது (2004ம்,2005ம் ஆண்டுகளில்)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**60ஆவது பிறந்த தின வைபவத்தின் போது - யாழ் போதனா வைத்தியசாலை**



# பிரதம விருந்தினராக பங்கு பற்றிய விழாக்களில்

**உடுவில் முருக மூர்த்தி மத்திய மகாவித்தியாலயம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம விருந்தினராக பங்கு பற்றிய விழாக்களில்

இணுவில் இந்துக்கல்லூரி




ஸ்கந்தவரோதயா கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் அவர்களால் கௌரவிக்கப்படும் போது 2007களில்



இல்லாளின் மணிவிழாவில் (2017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் போற்ற வாழ்ந்த உத்தமர்

அமரர் முத்துக்குமாரு விஜயரகுநாதனின் நினைவு மலரில் எனக்கு அவரிடம் உள்ள உறவுத் தொடர்புகள் பற்றி அசைபோட விரும்புகின்றேன்.

அமரர் விஜயரகுநாதனை நான் இறுதியாகச் சென்ற ஆண்டு செப்ரெம்பர் மாதம் யாழ்ப்பாணம் சென்றிருந்த போது அவரது வீட்டிற்குச் சென்று சந்தித்திருந்தேன். உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலை எனினும் அவரது சிரித்த முகம் மாறாது எம்மோடு நீண்ட நேரம் உரையாடியதுடன் அவரது குடும்பத்தினரும் எமக்கு உணவு பரிமாறி உபசரித்திருந்தார்கள்.

திரு. விஜயரகுநாதன் முதன்முதலாகக் கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டதாரி மாணவனாக எனக்கு அறிமுகமானார். நான் ஒரு பகுதி நேர விரிவுரையாளராக பணியாற்றியபோது என்னிடம் பயின்ற ஒரு நல் மாணாக்கன் அவர். அதன்போது அவர் எனது கிராமத்தினைச் சேர்ந்தவர் எனக்கு உறவினர் என்பதை நான் அறிந்திருக்கவில்லை. எம்மிடையே ஒரு ஆசிரியர் மாணவர் உறவுதான் காணப்பட்டது. அவர் இந்த உறவினை எவ்வளவு மதித்தார் போற்றினார் என்பதனை அவர் தனது பிள்ளைகளுக்குக் கூட இவர் எனது ஆசிரியர் என அறிமுகப்படுத்துவதனைக் கண்டு நான் பெருமை அடைந்துள்ளேன்.

இவருடன் அடுத்த சந்திப்பு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இடம்பெற்றது. நான் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கணக்காளராகப் பணியாற்றியபோது அவர் திணைக்களத்தின் நிர்வாகப் பகுதியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். என்னை அங்கு கண்டதும் பல்கலைக்கழகக் காலங்களை நினைவுபடுத்தி உரையாடினார். தினமும் மதிய உணவுக்குப் போகும் முன்னர் எனது அலுவலகத்திற்கு வந்து உரையாடியே செல்வார்.

விஜயரகுநாதன் எனது உறவினர் அம்பாளைத் திருமணம் செய்து கொண்டார். இவர்கள் திருமணத்தின் பின்னர் மருதனாமடத்தில் வாழ்ந்து வந்தார்கள். இக் குடும்பத்தினர் எனது வழியிலும் எனது மனைவியின் வழியிலும் உறவினர். அப்போது நானும் எனது மனைவியும் அவர்களது வீட்டிற்குச் சென்று உரையாடி உறவு கொண்டாடி மகிழ்ந்துள்ளோம்.

நான் வெளிநாடு சென்றமையால் எம்மிடையே உள்ள தொடர்பில் ஒரு இடைவெளியேற்பட்டது. ஆனால் செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் அவுஸ்திரேலியாவிற்கு வருகை தந்ததன் பின்னர் அந்த இடைவெளி மறைந்து மீண்டும் தொடர்புகள் எழுந்தன. நான் யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்போதெல்லாம் அவர்கள் வீட்டுக்குச் செல்வதும் அவர்களுடன் உரையாடுவதும் உணவு உண்டு மகிழ்வதும் வழமையாகி விட்டன. ஒவ்வொரு முறை செல்லும்போதும் உடல்நலம் குன்றிய வேளையிலும் அவர் எதுவித மாற்றமும் இன்றிச் சிரித்த முகத்துடன் பல விடயங்களைக் கலந்துரையாடியது ஒரு கனவு போல் வந்து செல்கின்றது.

அமரர் விஜயரகுநாதன் ஒரு நல்ல வாழ்க்கையை வாழ்ந்து ஊர் போற்ற வாழ்ந்துள்ளார். அவரின் பெருமையை மேலும் மேலோங்கச் செய்யும் வகையில் அவரது பிள்ளைகளைச் சான்றோர்களாக வளர்த்தெடுத்துள்ளார். அவரின் வாழ்க்கை முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டாடப்பட வேண்டிய ஒன்று. அவரது பிரிவினைத் தாங்கும் மன உறுதியினை இறைவன் அவரது மனைவி பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

அவரது ஆத்மா சாந்தியடைய இறையருள் கிட்ட வேண்டும்.

திரு. வை. ஈழலிங்கம்
பணிப்பாளர்
அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
சிட்னி
23.01.2020


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவும் கரங்கள்

திரு. முத்துக்குமாரு விஜயரகுநாதனின் மறைவு அவரின் குடும்ப உறவுகளுக்கு அப்பால் எங்கள் எல்லோரையும் மிகவும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இவர் நீண்டகாலமாக நாட்டின் பல இடங்களில் அரச சேவையில் கடமையாற்றி, இறுதியில் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் கணக்காளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். அண்மைய யுத்த காலத்தில் இவர் வைத்தியசாலையின் இயக்கத்திற்குப் பெரிதும் பங்களித்தார். நிதி நிர்வாகத்தில் சிறந்து விளங்கியதுடன், இடர் முகாமைத்துவச் சூழலில் தற்துணிவுடன் மிகவும் நெகிழ்ச்சிப் போக்கைக் கடைப்பிடித்து வைத்தியசாலையின் பல்வேறு பிரிவினரதும் பாராட்டைப் பெற்றார். மேலும் கணக்காளர் பதவிக்கப்பால் நோயாளருக்கு உதவி செய்வதிலும் முன்னின்றார்.

இவர் யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த தமிழ் ஆசிரியர்களான திரு. கந்தையா ஆறுமுகம், திருமதி. சரஸ்வதி ஆறுமுகம் தம்பதிகளினது மூத்த மகளான செல்வி. குககுமாரி அம்மாளைத் திருமணம் செய்து மிகவும் சிறந்த இல்லற வாழ்க்கை மேற்கொண்டார். இவர் தனது மூன்று பிள்ளைகளைக்கும் நல்ல கல்வி கொடுத்து, சமூகத்தில் அவர்களை முன்னிலைக்குக் கொண்டு வந்துள்ளார்.

இவர் குடும்பத்தில் மூத்த மருமகனாக இருந்து மைத்துனர்கள், மைத்துனிகள், மற்றும் சகலன்மாருடன் இணைந்த கூட்டுக் குடும்ப வாழ்க்கையைச் சிறப்பாக முன்னெடுத்தவர். இவர் உற்றார், உறவினர், நண்பர்கள், ஊரவர்கள் மற்றும் பொது மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரிடமும் அன்பாகவும் பண்பாகவும் நடந்து வந்தவர். எவருக்கும் உதவி செய்வதில் முன் நிற்பவர். வீட்டிற்கு வருபவர்களை இன் முகத்துடன் வரவேற்று, உபசரிப்பதில் மகிழ்ச்சி காண்பவர்.

அமரர் விஜயரகுநாதன் தனது தொழில்துறைக்கு அப்பால் தமிழிலும், சைவத்திலும் மிகுந்த அறிவும் பற்றும் கொண்டவர். தேவாரம், திருவாசகம், திருப்புகழ் மற்றும் சைவ சித்தாந்தத்திலும் சிறந்த புலமை பெற்றவராக விளங்கினார். இதிகாச புராணங்களையும் நன்கு கற்றறிந்திருந்தவர். இதனால் உரிய வேளையில் பொருத்தமான பல இதிகாசக் கதைகளைக் கூறி எம்மோடு உரையாடி மகிழ்வார்.

மேலும் கிராமியக் கலை, கலாசாரம், பண்பாடு, நாட்டார் இலக்கியம். நாட்டார் வாழ்வியல் விழுமியங்கள் பற்றி மிகவும் தெளிந்த அறிவு கொண்டிருந்தார். இவருடன் அடிக்கடி உரையாடும்போது இவரது அறிவை என்னால் அறியக் கூடியதாக இருந்தது. வாழ்நாள் கல்வி என்ற வாசகத்தைக் கடைப்பிடித்தவர். இறுதிவரை கற்றுக்கொண்டே இருந்தவர். தனது அரச சேவையின் இறுதிக் காலத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதுகல்விமாணிப் பட்டம் பெற்றவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லூர்க்கந்தனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேராசிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர் / முன்னாள் துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரார்த்தனை உரை

அமரர் திரு விஜயரகுநாதன் அவர்கள் என்னோடு நீண்ட கால நட்புறவு கொண்டவர். யாழ் போதனா வைத்தியசாலைக் கணக்காளர் பதவியை மிகக் கண்ணியமாக செயற்படுத்திய ஒரு செயல் வீரர். நாட்டில் யுத்த மேகங்கள் சூழ்ந்த வேளையில் இறை நம்பிக்கையுடன் மிகத்தைரியமாக அர்ப்பணிப்புடன் எமது வைத்தியசாலையின் தேவைகளை பூர்த்தி செய்ய அரும்பாடுபட்டவர். உண்மையின் உறைவிடமாக நேர்மையின் வடிவமாக என்றும் எங்கள் முன் காட்சி அளித்தவர். மலர்ந்த முகத்துடன் வெளிப்படையாக பேசுபவர். அவரது குடும்பத்தவர்களுடனும் எனது குடும்பத்தவர்களுக்கு கௌரவமான நட்புறவுண்டு. எனது குடும்ப நலனையும் எமது கணக்காளர் என்றும் கரிசனையாக விசாரிப்பார். அவரது சேவைக்காலத்திலிருந்தே என் மீது அவர் அதீத நம்பிக்கையும் அன்பும் கொண்டிருந்தமையால் சிறுசிறு நோயுற்ற வேளைகளிலும் என்னிடமே ஆலோசனை பெறுவார். இவரது அன்பிற்குக் கட்டுப்பட்டு எனது குடும்பத்தில் மிக நெருக்கடியான சூழ்நிலை இருந்த வேளையிலும் இவருக்கு சிகிச்சை அளிக்க கொழும்பிலிருந்து வந்து சிகிச்சை அளித்தேன். என் வருகைக்காக காத்திருப்பார். மிகவும் அன்பும் நன்றியுணர்வும் மிக்க ஒரு நல்ல மனிதர். அவரது ஆத்மா நிச்சயம் இறைவன் திருவடியில் சாந்தி பெறும். எமது போதனா வைத்தியசாலையில் வீற்றிருக்கும் வயிரவர் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதிலும் நித்திய பூசை அன்னதானம் என்பவற்றை சிறப்புறச் செய்வதிலும் மிக விருப்புடன் செயற்படுவார். அவரது மறைவு அவரது குடும்பத்தவர்க்கும் அவரோடு பழகிய ஒவ்வொருவருக்குமே பேரிழப்புத்தான். எனினும் இறை நியதியை ஏற்று அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

வைத்திய நிபுணர். எஸ். ரவிராஜ் -பீடாதிபதி,

மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் இதயத்திலெல்லாம் குடிகொண்ட கணக்காளர் விஜயரகுநாதன் ஐயா

நடையில் கம்பீரம், நடத்தையில் நேர்மை, தோற்றத்தில் எளிமை இவை யாவற்றிற்கும் சொந்தமாக விளங்கும் கணக்காளரின் செயற்பாடு போற்றுதற்குரியது. திறமைகள் உயர்வாக இருந்தாலும் எளிமையாகப் பழகும் நல்ல பண்பால் வைத்தியசாலைச் சமூகத்தைச் சேர்ந்த எல்லோராலும் விரும்பப்படும் ஒரு கணக்காளராக இவர் திகழ்ந்தார்.

சொல்வன தெளிவுறச் சொல்லி செய்வன திருந்தச் செய்து சிறந்ததோர் கணக்காளர் எனப் பெயர் சூடியவர். நல்லன நிறைவேற வேண்டுமென்ற நோக்குடன் தாமே சுயமாக சிந்தித்து முடிவெடுக்கும் உறுதி பூண்டவர் ஒரு கணக்காளருக்குரிய ஆளுமையும் வழிகாட்டலும் ஆற்றலும் உடையவர்.

சேவைக்காக தன்னைத் தேய்த்து யாகக் குழியில் ஆகுதியாய் ஆக்கிய பெருமை இவரையே சாரும் "அரியவற்கு எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக்கிக் கொள்ளல்" என்ற கூற்றுக்கிணங்க மேலதிகாரிகளுடன் நட்புறவுடன் தொடர்பு கொண்டு மானிடப் பிறவியினூடக அளவிடற்கரிய சேவைகளையும் அதன் மூலம் உயர்ந்தோங்கும் புகழையும் கொண்டு விளங்கும் தலைமைத்துவத்தை இவரிடம் காணலாம்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்." என்ற வாக்கினை உள்ளத்தில் நிறுத்தி அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

அன்புடன்

தம்பிப்பிள்ளை பேரானந்தராசா,

பொது வைத்திய நிபுணர்

யாழ் போதனா வைத்தியசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் மு. விஜயரகுநாதன் அவர்களுடனான நினைவலைகள்

மலர்ந்த வதனமும் மனங்கவரும் சிரிப்பும் மங்காத தொனியும் மாசில்லா அன்பும் மிளிரும் எம் கணக்காளர் அமரர் விஜயரகுநாதன். யாழ் மாவட்டச் செயலகத்தில் கணக்காளராகக் கடமையாற்றிய காலங்கள் இன்றும் என் மனதில் நினைவலைகளாக வந்து செல்கின்றன.

பிரதம கணக்காளராகிய எனது கடமைகளைத் திறம்பட மேற்கொள்வதற்கு, தன் நலம் பாராது நேர்மையுடனும் பொறுப்புடனும் கடமையாற்றிப் பெருந்தூணாக நின்று உதவினார் எம் கணக்காளர். பக்தி சிரத்தையும் பாசமான பேச்சும் அவரை எல்லோரும் கவர்ந்திழுக்கும் சின்னங்களாகின. "சண்" என என்னை அழைக்கும் போது, எனது சகோதரரைப் போன்றதொரு உணர்வைப் பெற்றுள்ளேன். பண்பான பேச்சும், பாரபட்சமில்லாத அன்பும் நிறைவான நற்சிந்தனைகளும் அவரிடம் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள். அன்பாக அருகில் அழைத்துப் பணிகளை இலகுவாக மேற்கொள்ளும் வழிவகைகளைச் சொல்லிக் கொடுக்கின்ற ஆசானைப் போன்ற செயற்பாடுகள் கண்முன்னே வந்து போகின்றன. தனது சர்க்கரை நோய்க்குத் தேவையான பத்தியமான உணவுகளை தாம் உண்ணும்போது அதனை மற்றவர்களுக்கும் அன்புடன் பகிர்ந்தளிக்கும் விருந்தோம்பும் நற்பண்பைக் கொண்டவர் எமது கணக்காளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்ந்த தோற்றமும் நேசம் கொண்ட பார்வையும் மங்காத சிரிப்பும் கணக்காளருக்கே உரிய கம்பீரமான நடையும் இவை யாவும் நினைவலைகளாகிப் போயினவே.

அது மாத்திரமன்றி கூட்டுக்குடும்பமாக வாழ்வதற்கு தன்னால் இயன்ற பங்களிப்புக்களைச் செய்து அதனை நிலைபெறச்செய்த பெருந்தகையும் அவரே.

அமரர் விஜயரகுநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடைய நான் தனிப்பட்ட ரீதியாகவும் வடமாகாணக் கணக்காளர்கள் சார்பிலும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

சு. சண்முகரட்ணம்
ஓய்வு நிலைப் பிரதான கணக்காளர்
மாவட்டச் செயலகம்
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீக சிந்தனையோடு வாழ்ந்து காட்டியவர்

"திறன் தொழில் கல்வியாம்" (Professional Education) கணக்கியல் கல்விதனைக் கற்றுத்தேர்ந்து இலங்கைக் கணக்காளர் சேவைதனில் கால் பதித்துத் தனக்கும் தனது பெற்றோருக்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்ததோடு மட்டுமன்றி இலங்கைக் கணக்காளர் சேவைக்கும் பெருமை சேர்த்து இறைவனடி சேர்ந்த சிரேஷ்ட கணக்காளர் அமரர் முத்துக்குமாரு விஜயரகுநாதன் அவர்களின் மறைவுச் செய்தி எல்லோரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமரர் அவர்கள் கணக்காளராகப் பதவியேற்ற காலம் தொடக்கம் சேவையிலிருந்து ஓய்வுபெறும் காலம் வரை இலங்கை அரசியல் சமநிலை அற்றுக் காணப்பட்டதனால் நிர்வாகத்துறையும் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை காணப்பட்டது. அவ்வாறான சூழ்நிலையிலும் தனக்கு வழங்கப்பட்ட சேவைக்குரிய பொறுப்புக்களில் எந்தவிதத் தளர்வும் ஏற்படவிடாது மக்கள் சேவைதான் மகேசன் சேவையென மதித்து இருள் சூழ்ந்த போர்ச்சூழலிலும் மக்களுக்கு சேவை செய்து திருப்தி கண்ட தளராத உள்ளம் படைத்தவர்தான் அமரர் அவர்கள்.

"எது வந்தாலும் எமது தலைவிதியை மீறி எதுவும் நடக்காது" என்ற அந்த ஆன்மீகச் சிந்தனையோடும், தளராத மன உறுதியோடும் கணக்காளர் சேவைதனைக் கண்ணியமாய் மதித்து களங்கமிலா சேவையென பார் போற்ற விட்டுச் சென்ற அமரர் அவர்களின் உடல் மறைந்தாலும் அவர் புகழ் என்றும் மிளிரும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*கணக்காளர்கள்*

*இலங்கைக் கணக்காளர் சேவை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்போது உனைக் காண்போம் இனி

அன்பு, தன்னடக்கம், கருணை என்ற இன்னோரன்ன நற்பண்புகளெல்லாம் ஒருசேரத் தன்னகத்தே கொண்ட ஒரு தெய்வப்பிறவி எங்கள் அன்புத் தம்பி, ஆசை அண்ணா, ஆசை மாமா என்று இறுமாந்திருந்தோம். இன்று அந்த உறவு எம்முடன் இல்லை என்பதை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை.

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்

பெருமை உடைத்து இவ்வுலகு'

என்று தெரிந்திருந்தும் இப்பிரிவை எம்மால் ஏற்க முடியவில்லை.

பெற்றோருக்கு ஒரே மகனாயிருந்தும் எங்களில் ஒருவராக, இணுவிலில் எம் வீட்டிலே, சிறுபராயத்திற் பெரும் பொழுதைக் கழித்த அன்னார், எம் வீட்டு ஐந்து சகோதரர்களையும் தன் உடன்பிறப்புகளாக மனத்து இருத்திப் பழகினார். சகோதர்கள், மருமக்கள் யாவரும் 'ஆசை' என்ற அடைமொழி சேர்த்து அவரை அழைத்து அணைந்தோம். ஆசை அண்ணா, ஆசை மாமா என்று அழைக்கும்போது அதீத மனநெகிழ்வைப் பெற்றோம். சிறிய தாயாரைப் பெற்ற தாயாகவே நேசித்து அவர் நடந்த விதம் எல்லோரையும் கவர்ந்தது. தங்கையின் கணவரான மைத்துனரையும் ஆறாவது சகோதரராக அவர் மனம் ஏற்றது.

உதவி தேவைப்பட்ட போதெல்லாம் எம் குடும்பத்திற்குக் கைகொடுத்துதவிய பெருந்தகை அவர். நாம் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தினமும் ஆசை அண்ணாவுடன் தொலைபேசி மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவளாவி மகிழ்ந்திருந்தோம். பற்று மிகுந்த அன்னாரின் குரலை இனி எப்போது கேட்போம் என்று கலங்குகின்றோம்.

முகத்திற் குடிகொண்ட அமைதியுடன் யாருடனும் அளவளாவும் அவரது சிறப்பியல்பு, உற்றார் உறவினர்களை மட்டுமன்றி அமரருடன் பழகிய அத்தனை உள்ளங்களையும் இன்று கண்கலங்க வைத்துள்ளது.

கணக்காளர் பதவி வகித்த அலுவலகங்களில் அவருடன் சேவை செய்த உத்தியோகத்தர்கள் பலரும் அவரது மறைவுச் செய்தி கேட்டுக் கவலையுறுவதைக் காண்கின்றோம்.

"ங ப்போல் வளை" என்ற முதுமொழி நாம் அறிந்த ஒன்று. 'ங' என்ற எழுத்து தான் வாழ்வதன் மூலம் தன் வரிசை எழுத்துக்களையும் வாழவைப்பது போல, எங்கள் ஆசைத்தம்பி, ஆசை அண்ணா, ஆசை மாமாவும் சுற்றம் தழுவி வாழ்ந்தவர், தூய சிந்தனை படைத்தவர். அதனாற்தான் முழு முதற் பொருளாகிய எம்பெருமான் சிவனும் தனக்குகந்த திருவெம்பாவைக் காலத்திலே, அவரது ஆன்மாவைத் தன் பாத நிழலிற் சேர்த்தார் போலும்.

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்பது பொய்யாமொழி. அடக்கத்தோடு வாழ்ந்த எம் தெய்வப்பிறவி, இறைபதம் அடைந்து விட்டதை இவ்வாக்கு உறுதி செய்கின்றது. இதனால் எம்மனம் சிறிது ஆறுதலடைகின்றது.

ஆன்மீகச் சிந்தனையில் திளைத்த எம் தம்பி, ஆசை அண்ணா, ஆசை மாமாவுக்குச் சிறிதும் சளைக்காத ஆன்மீகச் சிந்தனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பியவர்கள் அவரது மனைவி குடும்பத்தினர் என்பது நாமறிந்ததே. 'நல்ல மனைவி, நல்ல பிள்ளைகள் நல்ல குடும்பம் ஒரு 'பல்கலைக்கழகம்' என்பர். அதனால் அவரது பிறவி கொடுத்து வைத்திருந்தது. அவரது பிரிவு குடும்பத்திற்கு ஈடு செய்ய முடியாத ஒன்று. காலம் என்பது மனப்புண்ணை ஆற்றும் சிறந்த மருந்து. அவர்களது மனப்புண்ணைக் காலம் விரைந்து ஆற்றப் பிரார்த்திக்கின்றோம்.

அமரரின் ஆன்மா இறை நீழலிற் சாந்தியடைய எம் வேண்டுதல்கள் பல.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்:

மைத்துனர் - பொ. பாலசுப்பிரமணியம்

தங்கை - கணேஷ்வரி

மருமக்கள் - ரங்ஹூா + நிரஞ்சன் → மகள் சிவஸ்ரா

கஸ்தூரி + காண்டீபன் → மகன் தருண்

பிரதீபன் + கௌதமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் கதை சொல்லும் இரத்த உறவுகள்

பரராஜசேகரன் அருட்பார்வையும இணுவில் ஆறுமுகனின் மனோ பலமும் வட்டுவினிப் பிள்ளையாரின் ஆத்ம பலமும் நல்லைக் கந்தனின் நல்லருளும் எமது வளவு ஞான வைரவரின் குரு சேத்திரமும் அம்மம்மாவின் அம்பாள் பார்வையும் ஒருங்கிணைந்த ஆத்ம பலம்பெற்ற குடும்ப உறவுகளின் வரிசையில் முத்துக்குமாரு செல்லம்மா அம்மையின் மகனாக விஜயரகுநாதன் அவர்கள் பிறந்தார்.

அவர் தம் உறவுகளின் வளர்ச்சியில் மிக,மிக அக்கறையுடன் செயற்பட்டவர். அண்ணன் எமது கல்வி வளர்ச்சிக்கும் தொழிற் திறனுக்கும் ஆன்மீக உய்விற்கும் வழிகாட்டினார். அண்ணன் அவர்கள் வழிகாட்டிய அந்த பொன்னான நாட்களை எண்ணிப்பார்க்கின்றேன்.

எம்மை வழிநடத்திய சிறந்ததோர் உள்ளம். சிறப்புமிகு கலங்கரை விளக்கு என்றால் மிகையாகாது.

அண்ணன் அவர்கள் இறைவனடி சேர்ந்த இவ்வேளையில் அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய எமது குலதெய்வத்தையும் எனது கதிர்காமக் கந்தனையும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி,

செல்லத்துரை ஜெயசோதிவரதன்

இணுவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அம்பாள் மாமா

என்றும் புன்சிரிப்புடன் மருமகள் என்ற பாசப்பிணைப்புடன் தாய்மாமன் போன்று நீங்கள் அன்புடன் நிறைவேற்றிய கடமைகளை மீட்டிப்பார்க்கின்றபொழுது என்னுள் எழுகின்ற உணர்வுகளை வார்த்தைகளுக்குள் அடக்கி எழுதிவிட முடியாது என்று உணர்ந்தாலும் நான் பிறந்தநாள் தொடக்கம் பல்லுக்கொழுக்கட்டை கொட்டுகின்ற நிகழ்ச்சியில் ஆரம்பித்து எங்கள் தாத்தாவின் குலதெய்வமாகிய நாயன்மார்கட்டு பேச்சியம்மன் கோவிலில் விற்றுவாங்கிய நாளிலிருந்து என்னை உங்கள் பிள்ளைபோல் கவனித்து நீங்கள் செய்த சகல உபசாரங்களையும் மீட்டிப்பார்க்கின்றேன்.

தினமும் கோவிலுக்குச் சென்று வரும்பொழுது மிகுந்த களைப்புடன் வந்தாலும் கதிரையில் இருக்காது ஒவ்வொருத்தராகப் பெயர் சொல்லி அழைத்து விபூதியை எங்கள் நெற்றியில் பூசி வாழ்த்தியமை நாங்கள் எங்கள் வாழ்க்கைப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கு அத்திவாரம் இட்டதுடன் எங்களுடன் தொடர்புபட்ட ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் நாள் நட்சத்திரம் பார்த்துக் கூறியதும் நீங்கள்தான். திருமணம் முடித்துக் கடல் கடந்து வந்தபின்னரும் உங்கள் அன்பான உரையாடல்களும் விசாரணைகளும் புத்திமதிகளும் எங்களை ஊக்கப்படுத்துவதாக அமைந்தது. எங்களது வாழ்க்கையை வளப்படுத்துவதில் உங்களின் வகிபங்கினை வார்த்தைகளினால் வடிக்க முடியாது. உங்கள் பாசம் மிகுந்த நினைவுகளை நாம் என்றும் மறக்கமாட்டோம்.

திருமதி. தாயினி கோகுலன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dudley Balaji Temple - United Kingdom (2011)



## Sanatan Temple – Wembley (2011)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Eastham Murugan Temple (2011)




Buckingham Palace - London (2011)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Madame Tussauds – Wax Museum (2011)



Big Ben –London (2011)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# London Museum (2011)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Garson Fruits Garden -London (2011)





**Madame Tussauds – Wax Museum (2011)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் வீட்டு Superstar

அன்பிற்கு அடிமையாக
அறிவிலே சிவப்புச்சூரியனாக
புன்னகையிலே பணக்காரனாக
தானத்திலே மன்னனாக
நட்பிலே தளபதியாக
தர்மத்தின் தலைவனாக
சேவையிலே எந்திரனாக
மாண்புமிகு மனிதனாக
பார்வையிலே பாசக்கடலாக
நேர்மையிலே தீயாக
நடையிலே தனிக்காட்டு ராஜாவாக
பெற்றோருக்கு தங்கமகனாக
மாமன் மாமிக்கு மூத்த மாப்பிளையாக
நல்லவனுக்கு நல்லவனாக
ராஜாதி ராஜனாக வாழ்ந்த என் பெரியப்பா
கடுமையான உழைப்பாளி
எங்கள் வீட்டு எஜமான்
நான் கண்ட ஓர் அதிசயப்பிறவி
என்றும் என் குருவாய் நின்று என்னை
வழிப்படுத்த அவர் ஆசிகளை
வேண்டி நிற்கின்றேன்.

செல்வி. தர்மிதா ஆனந்தரா ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரரின் பிரிவு குறித்து பத்திரிகைகளில் அனுதாபச் செய்தி வெளியிட்டோர்

- கணக்காளர்கள், இலங்கை கணக்காளர் சேவை
- சிவபூமி குடும்பம்
- இணுவில் இந்துக்கல்லூரி நம்பிக்கை நிதியம்
- இணுவில் அறிவாலயம்
- திரு. திருமதி கணேசலிங்கம் - ஆனந்தி குடும்பத்தினர் (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் / ஆசிரியர், யாழ்ப்பாணம்)

### கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலம் துயர் பகிர்ந்தோர்

- நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் & நல்லூர் ஆனந்தா வித்தியாலயம்
- தர்மகர்த்தா சபை, இளந்தொண்டர் சபை, இணுவில் கந்தசுவாமி கோவில்
- இணுவில் இந்துக்கல்லூரி நம்பிக்கை நிதியம்
- யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி, 3th அணி

### பதாதைகள் மூலம் துயர் பகிர்ந்தோர்

- கணக்காளர்கள், இலங்கை கணக்காளர் சேவை
- இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
- பல்கலைக்கழகக் கல்லூரி, மாத்தறை
- Jaffna Auto Mobile Pvt (Ltd)/Trinco Auto Mobile Pvt (Ltd)

### மலர்வளையங்களால் மரியாதை செய்தோர்

- இராமநாதன் கல்லூரி
- சிவபூமி குடும்பம்
- நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்
- பணிப்பாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், யாழ் போதனா வைத்தியசாலை
- இராமநாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (லண்டன்)
- உயிரியல் மருத்துவப்பிரிவு
- சிவபூமி முதியோர் இல்லம்
- DR திவாகரன் குடும்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- திரு திருமதி ஈழலிங்கம் -சிட்னி
- ESONS
- Nextgen Health Care Pvt Ltd

**இரங்கலுரை ஆற்றியோர்**

- தலைவர் –திரு. ம. தயாகரன் (HNP-முகாமையாளர்)
- கலாநிதி சி. சிவலிங்கராசா (முன்னாள் தலைவர், தமிழ்த்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- திரு. ப. விக்கினேஸ்வரன் (ஓய்வு நிலை, மாகாணக் கல்விப் பணிப்பாளர்)
- திரு. க. ஜெயரத்தினம் (ஓய்வு நிலை, அதிபர் , தொழில்நுட்பக் கல்லூரி யாழ்ப்பாணம்)
- திரு. ச. குகதாஸ் (பிரதம கணக்காளர், வட மாகாண சுகாதார அமைச்சு)
- திரு.ம.பிரதீபன் (மேலதிக மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம்)
- திரு.கு.பாலசண்முகன் (விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)
- வைத்திய நிபுணர். எஸ். ரவிராஜ் (பீடாதிபதி, மருத்துவ பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
- திரு.இ.விக்கினேஸ்வரன் (முன்னாள் துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- மாணவ பிரதிநிதி பல்கலைக்கழகக் கல்லூரி, மாத்தறை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கிறோம்

எமது தந்தை கணக்காளராகப் பணியாற்றிய வேளையில் அவரது சேவைக்கு உறுதுணையாகவும், அவரது உடல் ஆரோக்கியத்தில் என்றும் கரிசனையுடனும் விளங்கிய யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர்கள், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், அலுவலர்கள், தாதிய உத்தயோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் என்றும் நன்றியுடையோம்.

எமது அப்பாவின் பிரிவுச் செய்தி அறிந்த கணம் முதல் எம் அருகிருந்து எம்மை ஆறுதல்படுத்திய அன்பு உள்ளங்களுக்கும், திருமுறை பாராயணம் செய்தோருக்கும், இறுதிக் கிரியைகளுக்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்ட உற்றவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல், முகநூல் மூலம் துயர் பகிர்ந்த உறவுகளுக்கும், இறுதி நிகழ்வில் கலந்துகொண்ட அன்புள்ளங்களிற்கும் மற்றும் இறுதி ஊர்வலத்தைப் பாரம்பரிய முறைக்கமைய ஏற்பாடு செய்து எமது மருதனார்மடம் இல்லத்திலிருந்து பூவோடை மயானம் வரை நன்முறையில் நிறைவேற்றிய உறவுகளுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எம் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலரை கணினி வடிவமைப்புச் செய்த திருமதி. சிவசக்தி காண்டீபன் அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த சத்தியா அச்சகத்தினருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகள்.

நிறைவாக அப்பாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் இணைந்து கொண்ட அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

246/4A

கோயில் வீதி, நல்லூர்,

யாழ்ப்பாணம்.

அம்பாளகம்

மருதனார்மடம்

இணுவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிர்காமர் → பெரியதம்பி + சந்தனம்

மாணிக்கம்

பாக்கியம்

ஆச்சியம்மா

சின்னத்தங்கச்சி

செல்லக்கா

முத்துக்குமாரு

கனகரத்தினம்

காசியர் கந்தர் → வேலுப்பிள்ளை + முத்துப்பிள்ளை

பொன்னுத்துரை

செல்லத்துரை

இராசம்மா

செல்லம்மா

யோகம்மா

இராசலிங்கம்

விஜயரகுநாதன் + குககுமாரி (அம்பாள்)

லாவண்யா + மயூரேசன்


ஸ்ரீவிசாகன் + சுபரம்யா

ஸ்ரீவித்தகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org